அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல்

ஒளி-3 5-7-'63 வெள்ளி கதிர்-16-17

★ 10 பக்கங்கள் 16 காசு ★

வென்றது ஜனநாயகம்! வீழ்ந்தது பணநாயகம்!

ஜனங்கள் ஓடினுர்கள்; உறுமினுர்கள்! மலர்ரதத்தில் அதிகாரிகள் சூழ்பவனி! எல்லாம் நடந்தது அண்ணுமலையில்!

காமராசரின் மமதைக் குணத்திற்கு சமாதி எழுப்பினர் திருவண்ணுமலை மக்கள்!

முடிவுகேட்டு அலறினுர்கள் அத்தனை அமைச்சர்களும்! பண்டித நேருகூட அண்ணுமலை முடிவு கேட்டு பதறினுராம்!

திருவண்ணுமலைகள்தான் இனி நாடெங்கும்!

காங்கிரசுக்கு கல்லறை எழுப்பிய செயல்வீரர் ப. உ. சண்முகம் கழகவீரர்களில் முன்னணித் தோழர்! 15 வருடங்களாக பொதுப் பணிக்குத் தம்மை அர்ப்பணித்தவர். 10 வருடங்கள் திருவண்ணுமலை நகராட்சித் தலைவராக இருந்திருக்கிருர்! உழவர் குடும்பத்தில் பிறந்த உத்தமர். சிறந்த நாவன்மை மிக்க பேச்சாளர் மட்டுமல்ல; எழுத்தாளருங்கூட.

1957-ம் வருடம் அதே அண்ணுமலையில் காங்கிரசை தோற்கடித்து 5 வருடங்கள் சட்டமன்றத்தில் கண்டவர் வியக்குமளவு பணிபுரிந்துள்ளார்!

அவரது பணியை மீண்டும் மக்கள் விரும்பினுர்கள்! இந்த இடைத் தேர்தலில் 38666 வாக்குகள் அளித்து வாகை சூட்டியுள்ளனர்.

வெற்றித் திருமகன் பணிநாட்டிற்குத் தேவை! இவருடைய வெற்றியைக் கண்டு காங்கிரஸ் மேலிடம் கலங்குகிறது. காங்கிரசின் அகம்பாவத்திற்கு சமாதி எழுப்பிய ப.உ. சண்முகம் வாழ்க! அவரது பணி வெல்க!!

—0—

செயல் வீரர் ப.உ.ச வெற்றி!

சாகசக்காரிகளால் பல சாம்ராஜ்யங்கள் சரிந்தன என்பர்! கடந்த கிழமை பிரிட்டனின் ஆட்சியே கவிழ வேண்டிய நிலைக்கு ஆளாயிற்று ஒரு சரசவல்லியால்!!

சர்ச்சில் வளர்த்தக் கட்சி—சகலகலா விற்பன்னர்கள் நிரம்பிய கட்சி—பணப் பெட்டியும்பராக்கிரமமிக்கவர்களும் உள்ள கட்சி—பழைமைவாதிகளும் படித்தவர்களும் இருக்கின்ற கட்சி—கன்சர்வேடிவ் கட்சி மறையாத களங்கத்தைப்பெற்றிருக்கிறது ஒரு பெண்ணுல்!!

பாதுகாப்பு மந்திரி விலகினுர், அந்த வேல் விழியாள் விளைவித்த கோளாறின்காரணமாக!

சர்க்காரைச் சந்திக்கிழுத்த

முதன் மந்திரியான மாக்மிலனே, "தாங்க முடியாத வடு பெற்றேன், இதயத்தில். கட்சியையும் எங்களையும் மாருத சோகத்திலாழ்த்திவிட்டார் பாதுகாப்பு மந்திரி", என்று ஓலமிட்டார்!!

வார்ட

பிரபுயூமோ

திருமதி பிரபுயூமோ

பாராளு மன்றம் ரகளைப்பட்டது! எதிர்க் கட்சியினரின் கண்டனக் கணைகளுக்குத் தக்க பதில் சொல்ல முடியவில்லை முதலமைச்சரால்! ஆட்சியே கவிழும், ஆளும் கட்சிக்காரர்களே தாங்கொணுத அவமானத்தில் கிடக்கின்றனர், என்றெல்லாம் ஏடுகள், எழுதின,

இவ்வளவு பெரிய 'ரகளை'க்கும் காரணமான அந்தப் பெண்ணே அழகான 'ரோல்ஸ் ராய்ஸ்' காரில் பவனி செல்கிருள்! பதினையாயிரம் டாலருக்கு அமெரிக்கப் பத்திரிகையொன்றுக்குத் தனது 'வாழ்க்கை வரலாற்றை' வழங்குவதாக ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிருள்!!

வாழ்க்கை வரலாறு எழுத வேண்டிய அளவுக்கு இருபத்தோரு வயதான அந்த எழிலாளின் பெயர் உலகின் கவனத்தில் இன்று பதிந்துவிட்டது. அவளுக்கே இது ஆச்சரியமாயிருக்கும்! ஒருகாலத்தில் தன்னைச் சீச்சி! வாடி! போடி! என்றழைத்த அதே சமூகம் இன்று பேட்டி காணவும் பெரிது பெரிதாகப் படங்களைப் போட்டுப் பிரமாதப் படுத்துவதையும் காண அவளுக்குப்பெருமையாகக்கூட யிருக்கும்!!

கீலர்—எனும் பெயர் கொண்ட அவளைக் கிளி மொழியாள் பனிவிழியாள்! பருவ உடலாள் பளிங்குச் சிலையாள்! தொட்டால் விடாள்! தொட்டவரும் விடார்! சுந்தரியாள் அவள்! சொகுசுச் சிலை யெனலாம்! என்று துதிபாடிய படி, இலண்டன் மாநகரத்துப் 'பெரிய மனிதர்' கள் வட்டாரமே, அவளை வேட்டையாடக் கிளம்பியது, பிறகு. ஆனுல், ஆரம்

(2—ம் பக்கம்பார்க்க)

சரசவல்லி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பத்திலோ, அந்த இலண்டன் மாநகரத்துக்குள் அடியெடுத்து வைத்த சமயத்தில், அவள் தேனல்ல! தேள்!! இருட்டு நேரம், சந்துப் பக்கம், பூங்காவின் ஓரம், கடைவீதி......இப்படித்தான் அலைந்தாள் 'கிராக்கிப்' பிடிக்க.

அவள் விழிகள் வேட்டையாடிய காலம் ஒன்றிருந்தது! அது மாறி, அவளை வேட்டையாட விழிகள்அலைந்த காலமும் உருவாயிற்று !

ஒரு பெண்; அவள் வாலிபர்களையும் வயோதிகர்களையும் படுத்தி வைத்திருக்கும்பாடு ஏராளம்.

சீமான் வீட்டுச் செல்வியல்ல அவள்! ஏழைகளுக்குத்தான் பிறந்தாள். அவளுடைய இயற்பெயர் கிறிஸ்டின் கீலர் என்பதாகும்.அவள்சிறுவயதாயிருக்கும் போதே அவளுடைய தந்தை சிறையிலடைக்கப்பட்டவனென்றால் குடும்பத்தின் யோக்கியதையைக் கூறவும் வேண்டுமோ!! அப்படிப்பட்ட சூழ்நிலையில் வளர்ந்த அவள் இலண்டனையே அதிர வைத்தாள்; அரசையே ஆட வைத்தாள்; அழகுத் தீயென்று அழைக்கப்படுகிறாள், இன்று.

அவள்அழகூமூட்டியதீ,சாதாரணமானதல்ல! அரசுகள் அத்தனையும் எச்சரிக்கையோடு இருக்க வேண்டிய அளவுக்குப் பயத்தை இன்று உண்டாக்கியிருக்கிறது.

பிரிட்டிஷ் பாதுகாப்பு மந்திரி புரொப்யூமா என்பவர் யார்? நமது பூவராகன் அல்ல! கடந்த போரில்குண்டுகளையேந்தியவர். தன் வாழ்நாளெல்லாம் கட்சிக்குத் தொண்டாற்றியவர். படித்தமேதை! பலராலும் பாராட்டப்படும் சமூக வாழ்க்கையைப் பெற்றவர்! எதிர்காலத்தில் மாக்மிலனுக்குப் பிறகு இங்கிலாந்தின் பிரதமராக வரவேண்டிய அளவுக்குச் சக்தியும் செல்வாக்கும் பெற்றிருந்தவர். அழகான மனைவியுண்டு! அவள்ஒரு திரை நட்சத்திரமாயிருந்தவர்!! கணவனும் மனைவியுமாகபுரொப்யூமா தம்பதிகள் இலண்டனில் நடைபெறும் கேளிக்கைகளில்கலந்து கொள்ளும்போது, எல்லோருடைய கண்களும் அவர்கள்மீது தான் இருக்குமாம். அந்தளவுக்கு உல்லாசமான தம்பதிகள்!!

குழந்தை குட்டிகள் இல்லாதவருமல்ல! கோல நிலாபோல மனைவி! கொஞ்சும் கிள்ளைகள் போல பிள்ளைகள்! அரசியல் தலைவர். செல்வத்திலும் சீமான். ஒரு மனிதனுக்கு வேண்டிய அத்தனைச் சுகவழிகளும் இருந்தன, புரொப்யூமாவுக்கு.

ஆனாலும், ஆசை கொண்டார் கீலர்மீது! சபலம், தாத்தாக்களைக்கூட விடாது என்பதைத்தான் தமிழ் நாட்டு அரசியலிலேயே கண்டிருக்கிறோமே நாம்!! அந்தச் சபலம், அதளபாதாளத்துக்கு இன்று அழைத்துச் சென்றுவிட்டது புரொப்யூமாவை. அவர் தனக்கு மட்டும் கேடு செய்து கொள்ளவில்லை, தான் பாடுபட்ட கட்சிக்கும் மகத்தான துரோகம் செய்துவிட்டார்.

அடுத்துவரப் போகும் பொதுத் தேர்தலில் இந்த ஒரு சம்பவமே போதும் கன்சர்வேடிவ் கட்சி தோற்பதற்கு என்று கூறப்படுகிறது! இன்று அதன் பெயர் சந்திசிரிக்கிறது. உலகத்துக்கே ஜனநாயகம் போதிக்கின்ற பார்லிமெண்டன்றோ பிரிட்டனில் உள்ளது? பிரிட்டிஷ் மக்களும் அரசியல் புரியா கிணற்றுத் தவளைகளல்லவே!!

புரொப்யூமா, கீலருடன் நடத்திய காதல் கேளிக்கைகளுக்குப் பின்னால் மாபெரும் சதியே மறைந்து கிடக்கிறது. அந்த இடம்தான் அனைவரையும் இன்று திகைக்க வைத்திருக்கிறது. கீலர், பிரிட்டிஷ் பாதுகாப்பு மந்திரியான புரொப்யூமாவுக்கு ஆசைக் காதலியாக இருந்தது மட்டுமல்ல, ரஷ்ய கப்பற்படைத் தளபதியான காப்டன் யூகின் இவனேவ் என்பானுக்கும் காதலியாயிருந்திருக்கிறாள்!! எனவே காதலையல்ல காய்வது பிரிட்டன்! காதல், அரசியல் 'சதி'க்குக் கருவியாக்கப்பட்டிருக்கிறது!!

தான் காதலித்த ஒரு சீமாட்டிக்காக பிரிட்டிஷ் மகுடத்தையே வேண்டாம் என்று உதறித் தள்ளிய விண்ட்சர் கோமகன் பிறந்த மண்ணில் ஒரு பெண், காதலைக் கருவியாக்கி, பாதுகாப்பு மந்திரியின் மூலம், இரகசியத் தகவல்களைச் சேகரித்து ரஷியாவுக்கு வழங்க முயன்றிருக்கிறாள்.

ஆவதும் பெண்ணாலே! அழிவதும் பெண்ணாலே!! என்பார்கள். அதனை உண்மையாக்க முயன்றிருக்கிறாள், கிறீஸ்டின் கீலர்.

அவள் யாருடன் என்னென்ன கேளிக்கைகள் நடத்தினாள் என்று விதவிதமாகச் சேதிகள் வருகின்றன. அவைகளைப் படிக்க, "இதுதானா பெரிய மனிதர்கள் செய்கின்ற காரியம்;" என்று வேதனை யுருவாகிறது, நிர்வாணமாக அவள் ஓட, அவளைத் துரத்திப் பிடித்து, விளையாடுவார்களாம் ஓரிடத்தில்! புரொப்யூமாகூட அப்படியெல்லாம் செய்தாராம்!!

ஃ

இலண்டனை ஒட்டியுள்ள ஒரு இடத்தில் பணிப்பெண்ணாகயிருந்தவள் கீலர். அங்கே ஜானிப்ரே என்பானைக் காதலனாக்கிக் கொண்டாள். அடுத்தடுத்துத்தாவும் குரங்குஎன்பரே மனதை! கீலரின் மனக்குரங்கு, 'ஒருவனோடு' வாழ்வதோடு நிற்க விரும்பவில்லை. உலகத்தின் ஆடம்பரங்கள் அவளது இதயத்தைக் கவர்ந்தன. 'நாமும் அப்படியிருக்க முடியாதா?', என்று ஏங்கினாள். 'ஏனிருக்கக் கூடாது?' என்று துணிந்தாள். என்னதான் ஆகும், பார்ப்போமே!', என்று தன் காதலனை விட்டு விட்டு கண்ணைப் பறிக்கும் நவநாகரீக வசதிகள் நிரம்பிய இலண்டன் மாநகருக்குள் நுழைந்தாள். வயது 16 தான் அப்போதுஅவளுக்கு!

இலண்டன் —மாநகரமாயிற்றே! எந்த நகரம்தான் இப்போது தூய்மையோடு உள்ளது? ஓட்டல் முதலாளிகள் கண்டனர்! உல்லாச விடுதி வைத்திருப்போர் பார்த்தனர்! குடிக்கும் ஓட்டல்கள்! குடிக்க வருவோருக்குப் பாடிப் பரவசமூட்டும் கலையரங்கங்கள்!— எல்லாம் உண்டே, அங்கு. அப்படிப்பட்ட இலண்டனுக்குள் நுழைந்த அந்த 16-வது வயதிலேயே அவளுக்கு ஒரு குழந்தை பிறந்தது. ஆனால், பிறந்த ஆறாவது நாளிலே அக்குழந்தை இறந்தது, எப்படிச் செத்ததோ யார் கண்டார்கள்

தேம்ஸ்நதியோரத்தில்திரிந்த தேன்முகவதியாளுக்குஇரண்டு காதலர்கள் அகப்பட்டனர்! இருவரும் செவ்விந்தியர்கள்!! ஒருவன் பெயர் எட்ஜ்கோம்பே. இன்னொருவன் பாடகனான அலாய்ஷியஸ் கார்டன். இந்த இரண்டு பேராலும்தான், புரொப்யூமாவின் இரகசியமே கடைசியில் வெளிப்பட்டது.

ஒரு நாள், அவள் வேலைப் பார்த்த உல்லாச விடுதிக்குள் டாக்டர் வார்டு எனும் பெயர் கொண்ட ஒரு டாக்டர் நுழைந்தார். உடல் நோய்க்கு மட்டும் சிகிச்சை செய்கின்ற டாக்டரல்ல அவர்! உள்ள நோய்க்கும் "மருந்து" தரும்புலி!! அவருக்கு அழகு அழகான ஓவியங்களை வடிப்பதில், ஆர்வம் அதிகம். அதற்கு "மாடல்" தேடுவது என்பதுதான் அவர், சரசாங்கிகளைச் சந்திக்க வைத்திருந்த

(10-ம் பக்கம்பார்க்க)

'தலை'யில்லாக் கட்சி!

கடந்த ஆறு திங்களாகத் தலைவரில்லாமலேயே ஒரு கட்சி இருந்து வருகிறது.

அதுதான் வீரம் பேசும் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி!!

கடந்த பிப்ரவரியில் பொதுச் செயலாளராகயிருந்த ஈ. எம். எல். நம்பூதிரிபாத் விலகியதிலிருந்து யாரும் அந்தப் பொறுப்பையேற்கவில்லை.

இதுவாரம், இதுபற்றி ஆலோசிக்கக் கூடிய இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் கூட்டத்திலும், யாரும் முன்வராததால் தொடர்ந்து பொதுச் செயலாளர் இல்லாமலேயே காரியங்களைச் செய்வதென்று முடிவு செய்திருக்கிறார்கள்.

என்ன நியாயம்?

இந்தியை அரசியல் சட்டம் ஏற்றுக் கொண்டிருக்கிறது என்பதும் தமிழர்களைக் கட்டுப்படுத்த முடியாத வாதமாகும். அரசியல் சட்டம் பெரும்பான்மையான மக்களின் பிரதிநிதித்துவம் பெற்றவர்களால் இயற்றப்பட்டதுமல்ல, அல்லது அது நிறைவேற்றப் பட்டவுடன் இந்நாட்டு மக்களின் ஒப்புதல் பெற்றதுமில்லை. அப்படியிருக்க யாரோ சிலர் கூடி உண்டாக்கிக் கொண்ட ஒரு சட்டத்தைச் சுட்டிக் காட்டி இந்த மண்ணக மக்களைக் கட்டியாள நினைப்பதில் என்ன நியாயம் இருக்கமுடியும்?

கவனிக்க

'அறப்போர், சம்மந்தமாக கடிதம் எழுதுவோர், 'நிர்வாகி, அறப்போர், 9. ஏ. டாக்டர் சி. பி. ஆர். ரோடு, சென்னை-18.' என்ற முகவரிக்கு எழுதுக.

அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல்

சந்தா விவரம்

உள்நாடு
ஆண்டு சந்தா 8—00
6 மாத சந்தா 4—50
வெளிநாடு
ஆண்டு சந்தா 9—00
6 மாத சந்தா 5—00

ஒளி - 3 | 5-7-'63 வெள்ளி | கதிர் - 16-17

★ செச் சேச்சே! ★

"சீச்சிச்சீ! அது பழமா? மலம்! தொடக்கூடாத பொருள்! மனிதன் போய் அதைக் கையில் எடுப்பானா! அய்யய்யே!!", என்று ஊரறிய உரத்து முழக்கமிட்டவன், யாருமில்லாத ஊருக்குப் போய், "இங்கே யார் பார்க்கப் போகிறார்கள்? எடுப்போம்! இஷ்டம் போல் அள்ளுவோம்! அதோடு இங்கிருந்து வீட்டுக்கும் கொஞ்சம் கொண்டுபோய் வைத்துப் பூஜிப்போம்!" என்று நடப்பானானால், அவனை என்னவென்று சொல்வது.

0 0 0

மலம்! தொடக்கூடாதது! ஏனெனில் நம்மையாண்ட, துரைமார்மொழி!! — என்கின்றனர், இந்திக்காரர்கள், இங்கிலீஷ் மொழியை.

இந்தி வெறியர்கள் மட்டுமல்ல! இங்குள்ள காமராசர் குழாமும், "ஆங்கிலம் அந்நிய மொழி! அதை ஒழிப்பதுதான் தேசீயம். இந்தியை நாம் ஏற்றால்தான் எதிர்காலத்தில் வாழ முடியும்", என்று பசப்புகின்றனர்.

பண்டித நேரு அவர்கள் அகில உலகத்தலைவர் ஆயிற்றே! பிரிட்டனோடு குலாவவும், அமெரிக்காவுடன் நேசமொழிபேசவும், ஆஸ்திரேலியாவுடன் பேரம் நடத்தவும், ஆங்கிலம்தானே பயன்படுகிறது, அதையுணராமலா பேசுவார் என்று எதிர்பார்த்தால் அவரும் சங்கநாதம் எழுப்புகிறார், "ஆங்கிலம் அன்னியமொழி! அதை அகற்ற இந்தி என்ற பொதுமொழி வேண்டும்" என்று.

ஆங்கிலேய ஆதிக்கம் ஒழிக என்றோம்! அதன் பொருள், நம்மைச் சுரண்டும் வேற்றுநாட்டானின் அரசியல் தொடர்பு வேண்டாம் என்பதே!! அத்தொடர்பும் இந்தியா சுதந்திரம் பெற்றதோடு அற்றுபோய் விட்டது. அதனால், அவன் கண்டு பிடித்த—அமைத்துத் தந்த—ரயில், விமானம், தபால், தந்தி, எதையும் நாம் மறுத்துவிடவில்லை! இதெல்லாம் இங்கிலீஷ் காரனுடையதாச்சே என்று தள்ளிவிடவில்லை. வாழ்க்கைக்குத் தேவையான சாதனங்கள் என்று சொல்லி இவைகளை நாம் மறுக்கவில்லை! வெறுக்கவுமில்லை!! அதேபோல. உலகத்தோடு பழகிப் பேச நமக்கொரு சாதனம் தேவை, அது இன்றைய தினம் ஆங்கிலமொழிதான். ஆனால், அது கூடாது, ஏனெனில் ஆண்ட அந்நியர்மொழி என்கின்றனர்! நாமென்ன சுதந்திர உணர்ச்சியற்றவர்களா—சுதந்திரம் பெற்ற பிறகும் அந்நிய மொழியை வைத்துக் கொள்ளலாமா என்று வீரம் பேசுகின்றனர்,

ஆனால் இரு கிழமைகளுக்கு முன்பு இலண்டன் மாநகரில் பிரிட்டிஷ் அரசியார் அளித்த பெருவிருந்துகளில் கலந்து உறவாடிய இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் இராதாகிருட்டிணன் என்ன செய்தார் தெரியுமா? "ஆங்கிலம் அந்நிய மொழி. அதில் நான் பேசேன்", என்று மறுக்கவில்லை! இந்தி, யாருக்குப் புரியும்? முதலில் அவருக்கே தெரியாதே!! நாம் அதைக் கூடப் பெரிதாக்கிச் சொல்லவில்லை. விருந்தளித்த பிரிட்டிஷ் அரசியைப் பார்த்துக் கேட்டாராம், "அரசியாரே! அரசியாரே! நானிருக்கும் டில்லிப் பட்டணத்து மாளிகையில் காந்தி போன்ற பலரது படங்கள் உள்ளன. ஆனால் தங்களுடைய படமும், தங்கள் கணவருடைய படமும் இல்லை. அவசியம் அந்த இரண்டும் வேண்டும். நான் என் மாளிகையில் மாட்டிட விரும்புகிறேன்", என்பதாக. "ஆங்கிலம் கூடாதாமே! அந்நாட்டு ராணியின் படங்கள் மட்டும் தேவலாமா!!", என்று நாம், இதைக் கூடப் பெரிதாக்கவிரும்பவில்லை! ஏனெனில், அரசியாரும் அவரது கணவரும், நம்மை அடிமை கொண்ட பிரிட்டனை ஆளவில்லை. அவருடைய பெற்றோர்கள்தான் நம்மை அடிமைப் படுத்தியிருந்தவர்கள்! அதைக் காரணம் காட்டி இன்றைய அரசியல் தலைவர்களின் படங்களை குடியரசுத் தலைவர் மாளிகையில் மாட்டக்கூடாது என்று கூறுகிற அளவுக்கு கோணல்மதிகொண்டவர்களல்ல, நாம்!!

ஆனால், நமது இராதாகிருட்டிணன், வேறொன்றும் கேட்டிருக்கிறார், "அரசியாரே! எனது மாளிகையில் மாட்ட உங்களிருவர் படங்களோடு முக்கியமாக உங்கள் தந்தை யாருடைய படமும் அப்போதைய இராணியாரான தங்கள் தாயின் படமும் நான் திரும்பிப் போவதற்குள் அவசியம் வேண்டும்", என்று வேண்டியிருக்கிறார்.

மொழி கூடாதாம்! படம் வேண்டுமாம்!! அந்நியமொழி ஆதிக்கம் கூடாதாம்! மாளிகையில் மாட்ட மட்டும் ஆதிக்கம் செய்தவர்களின் திருஉருவப் படங்கள் வேண்டுமாம்!!

டாக்டர் இராதாகிருட்டிணன் நமது பண்பையுணர்த்தியிருக்கிறார். விரோதிகளாயிருந்தோமாயினும், எங்கள் லட்சியம் முற்றுபெற்றதும் உங்களை நண்பர்களாகப் பாவிக்கிறோம்". என்கிற அரிய பெரிய உண்மையைக் காட்டியிருக்கிறார் என்று வாதிடக்கூடும் தேசீய நண்பர்கள்! அதுதான் காரணமாயின் அந்தப் பரந்த உள்ளத்தை நாமும் பாராட்டுகிறோம்!!

பரந்த மனோபாவம் தனிப்பட்டவர்கள்மீது தனிப்பட்டவர்களுக்கு உருவாகிவிட்டால் மட்டும் போதாதே! இராதாகிருட்டிணனை அரசி பாராட்டவும், அரசிக்கு மரியாதை செய்தோமென்று இவர் திருப்திபடவுமாக இச்சம்பவங்கள் முடிந்துவிடும்.

இத்தகைய பரந்த மனோபாவம் பலகோடி மக்களுக்கு நன்மை பயக்கும் விதத்தில். தொல்லைக் கொடுக்காத முறையில் உருவாகவேண்டும்! ஆதிக்கம் செலுத்திய மன்னர்பிரான் தம்பதிகளுடைய படங்கள், தனது மாளிகையை அலங்கரிக்க வேண்டுமென குடியரசுத் தலைவர் விரும்புவது, அவருடைய ஆசை. அதேபோல, தங்களது வாழ்க்கைக்குப் பயன் தருவதுஆங்கிலம்; கேடு தருவது இந்தி என்று பல கோடி மக்களின் உள்ளம் இன்று சொல்லுகின்றதே. அந்த மக்களுடைய ஆசையை நிறைவேற்றினால் என்ன!

சுயநலத்துக்கு, வீம்பை விடலாம், கித்தாப்பை இழக்கலாம் கொண்டு வந்து படங்களை மாட்டலாம் எனின் 'பொது நலத்துக்காக'ப் பிடிவாதத்தையும் பேராரவாரத்தையும் விட்டால் என்ன!!

படம் தேவலாம்—மொழி கூடாதா?

ஆதிக்கம் செலுத்திய மன்னர் பிரானுக்கு மாலைபோடலாம்—அறிவை வளர்த்த மொழியை ஆதரிக்கக்கூடாதா!?

என்ன மனமோ!! என்ன கொள்கையோ!!!

தி’ அண்ணுமலே தீர்ப்பு—காங்கிரசுக்கு ஆப்பு!

நேர்மை வெல்லும்! காட்டாட்சி அகலும்!

சாதாரண வெற்றியல்ல, இது!

கழகம் மக்கள் இதயம்

காமராசர் முதல் அவரது சகாக்கள் அத்தனைப் பேரும் முற்றுகையிட்டார்கள்; இத்தனைக்கும் மேலாக ஐயாவும் விட்டேனுபார் கண்ணீர்துளிகளை என வரிந்து கட்டிக் கொண்டு கன வேகத்தில், “காமராசரின் காலம் பொற்காலம்! பொற்கால புதல்வரின் ஆட்சி நீடிக்க காங்கிரசுக்கே ஓட்டுப் போடுங்கள் என்று புயல்வேக பிரச்சாரம் செய்தார்! பிள்ளேயும் தாங்கள் என்னப்பா, தங்களுடைய வாரிசாக நான் இருக்கும்வரை அந்தப் புண்ணியவான் ஆட்சியைக் காப்பாற்றுவேன், என்று அண்ணுமலே முழுதும் அண்ணுத்துரைக்கு அரோகரா என முழங்கினுராம் புதுக்கட்சித் தலைவர்!

தமிழரசுக் கட்சியினரும் வில் அம்பு மீனேடு புலியையும் பொறித்த கொடியுடன் வந்ததைக் கண்ட செங்கொடியினர், நீங்கள் எல்லாம் ஏன்? எங்களின் பாரம் பரியமே அது தானே! நீங்கள் எல்லாம் கூலிக்கு மாரடிப்பவர்கள் நாங்கள் பண்ணேயாட்கள் தான் காமராசருக்கு, எங்கள் கடமை எஜமானனை காப்பது தான். ஆகவே போடாதே... போடாதே! தி. மு. க. வுக்கு ஓட்டு போடாதே! போடாதே தீய சக்திபிரிவினைவாதிகளுக்கு ஓட்டுப் போடாதே என்று செங்கொடி ஏந்தி வீதிவலம் வந்தார்கள்.

கோமான்பாலதண்டாயுதம் “தி. மு. க. மந்திரிசபைஅமைத்தால் வன்முறையில் ஈடுபட்டு மந்திரி சபையை கவிழ்ப்பேன்” என்று சண்டமாருத சவால் விட்டாராம்.

இத்தனைசில்லரைகளேயும் காமராசர்நம்பவில்லே. சென்னைமாநிலமுழுதுமுள்ளபணமுதலேகள் அத்தனையும், சர்க்காரின் வேன்கள், வாகனங்கள், போலீஸ், சப் இன்ஸ்பெக்டர், சர்க்கிள் இன்ஸ்பெக்டர், கலெக்டர், தாசில்தார், கபர்தார்இத்தனை பேரும் மட்டுமல்ல!

கக்கன்ஜி, வெங்கட்ராமன், ராமையா, மன்ருடியார், ஜோதி வெங்கடாசலம், மஜீத், இத்தனைப் பேரைவிடஅரசியல் வித்தகர், காங்கிரஸ் முகாமின் அறிவாளி புது மந்திரி பூவராகவன், தவப்புதல்வர் விருதுநகர் வீரர், பொற்காலச் செல்வர் காமராசர், துணைச்சபாநாயகர் பார்த்தசாரதி, இத்தனைப் பேரும் செல்லாத ஊரில்லே; கும்பிடாத மக்களில்லே;விழாத கோவிலில்லே. வேண்டாத தெய்வமில்லே. முழங்காத மேடையில்லே; இத்தனை ஆர்ப்பாட்டங்களும் நடந்தது அண்ணுமலேயில்.

காமராசர் தனக்குத்தெரிந்த சாக்கடை மொழியில் திட்ட வேண்டிய அளவு திட்டி முடித்தார்; பூவராகன்புலம்பமுடிந்த வரை புலம்பினுர்; அனந்த நாயகி தனக்குத் தெரிந்த பிலாக்கணங்களே பாடி முடித்தார்! சுலோசனு உண்ணுவிரத நாடகமாடியுள்ளார். மன்ருடியார் காங்கிரசுக்கு ஓட்டுப் போடாவிட்டால் கொஞ்சம் ஆபத்துதான் என்று மிரட்டியுள்ளார். பூவராகவன்போலீசாரோடு கழகத் தோழர்களே கைதுசெய்திருக்கிறுர்!கக்கனே தாழ்த்தப்பட்ட நான் மந்திரி! நீங்களும் மந்திரிதானே! காமராசருக்கு ஓட்டுப் போடாவிட்டால் காமராசர் போலீஸ் மந்திரி என்ன செய்வாரோ தெரியாது! என்று தாழ்த்தப் பட்ட மக்களிடம் இவ்வாறு மிரட்டியுள்ளார்.

இத்தனைப் பேரின் முழக்கத்தையெல்லாம்விட,பெரியாரின் சகாக்கள், சம்பத்தின் சிஷ்ய கோடிகள், செங்கொடி தீரர்கள், ம. பொ. சி. யின் சிகாமணிகள் இத்தனைப் பேரும் காமராசர்முன் கங்கணம் கட்டிக்கொண்டார்கள் தி. மு. க. வை அழிப்பதற்கு. கைக்கூலி பெற்றுக்கொண்டார்கள் கழ

(7-ம் பக்கம் பார்க்க)

புலி வேட்டை!

ஆர்ப்பாட்டம் செய்வதும் அது முடிந்த கொஞ்ச நாளைக்குள் ஒய்ந்து போய்உட்கார்ந்து விடுவதும் பொதுவாக எல்லோருக்கும், குறிப்பாக எந்தத் தேசீய இயக்கத்திற்குமே கூடாத ஒன்ருகும்.

நம்முடையஇலட்சியம்தெளிவாக இருக்கிறது;அதைப்பெற நாம் என்ன செய்யவேண்டும் என்பதும் நமக்கு நன்ருகப் புரிகிறது.அதனுல்தான், எதையும் பொதுநோக்கோடு அணுகி கூட்டத்தோடு கோவிந்தா போடாமல், ஒவ்வொரு காரியத்தையும் நாம் சாதித்து வருகிருேம்.

கொள்கையும்குறிக்கோளும் நமக்குத் தெளிவாக இருப்பதால், பிறர் ஏசும்போதுகூட நமக்கு ஆத்திரம் வருவதில்லே. நாம்ஈடுபடும்:கிளர்ச்சிகளிலும் ஏதாவது ஒரு வகையில் வெற்றி காணுமல் போவதில்லே;கடமை கண்ணியம், கட்டுப்பாடு எனும் மூன்று தாரக மந்திரங்களேயும் உள்ளத்திலே ஏந்தி பாடுபட்டு கொண்டு வருகிருேம்.

நாட்டின் நன்மைக்கான எந்த செயல்களிலும், தி. மு. க. ஈடுபடாமலிருப்பதில்லே; யார் அழைத்தாலும், நல்ல காரியம் எனின்நாம்நமதுஒத்துழைப்பை தர மறுப்பதும் கிடையாது.

ஆள்வோருக்கு வேண்டுமென்றேமக்களேப் புலிகளாக்கி விடுவதில்லே, நாம். அதே சமயத்தில் ஆளும் அரசு, புலியாக மாறி மக்கள்மீது பாய்ந்தால், ஓடிச் சென்று தடுக்கவும் அஞ்சுவதில்லே.

இதனுல்தான், இன்று நமக்கு, தென்னுட்டு அரசியலில் ஒரு நல்ல இடம் உருவாகி இருக்கிறது. நாம் பாடுபட்டு வரும், விடுதலே புரிப்பயணத்துக்கும், எங்கிருந்தெல்லாமோ அன்பும் ஆதரவும் கிடைக்கிறது.

சூது, நாம் அறியாதது! தூய்மை நம் சொத்து! மக்கள் பணியே நம் அரிச்சுவடி! அரசியல் நாகரீகமும்,அனேவரையும் உடன் பிறந்தவர்கள் போல் எண்ணுவதும் நமது பாதை.

நாட்டின்வாழ்வில்,நானுவித கட்சிகளிருப்பினும், அவைகளுக்கும் நமக்கும் அடிப்படையில் ஒரு வித்தியாசம் உண்டு. அனேத்தும் மக்கள் சேவைக்காகத்தான் உள்ளன. எனினும் நமது குறிக்கோளும், அதைப் பெறநாம் நடைபோடும் மார்க்கமும் வேறு.

தேங்காயிருக்கிறது! அதை தேவாலயத்துக்கு எடுத்துச் சென்று உடைத்து, அர்ச்சனே செய்யச் சொல்லி, ஒரு மூடியை அர்ச்சகருக்கு கொடுத்துவிட்டு இன்னெரு மூடியை வீட்டுக்குக் கொண்டுசெல்பவர்கள் உண்டு.

சிலர், வீட்டு விசேடத்தின் போது, 'திருஷ்டி' கழிப்பதாகச் சொல்லி, நடுவீதியில்--உடைப்பார்கள்; அதைப் பொறுக்கச் செல்பவர்களில் சாமர்த்தியம் உள்ளவனுக்கு நிறைய தேங்காய் கிடைக்கும்; மற்றவர்களுக்கு ஓடுதான் கிடைக்கும்.

இன்னெரு விதமும் உண்டு! தேங்காயைத்தாய்மார்களிடம் கொடுத்தால், அதை உடைத்துப் பதமாகத் திருவி, எந்தப் பண்டத்திலே சேர்த்தால் இனிப்போடு சுவை தரும் என்பதறிந்து, பக்குவமாகச் சேர்த்துப் படைப்பார்கள.

கட்சிகளும், இப்படித்தான்! நாம், மூன்ருவது சொன்ன விதம் போன்றவர்கள்!!

சில கட்சிகள், தங்களுக்கிருக்கும் செல்வாக்கை 'சூறைக்காய்' உடைப்பது போலப் பயன்படுத்தி விடுகின்றன. சிலருக்கு மண்டைகள் உடைகின்றன; சாமர்த்தியமுள்ளவன் தேங்காயுடனும், நோஞ்சலாயுள்ளவன் ஒட்டையும் எடுத்துக்கொண்டு போகிருன்.

தி. மு. க.-தன் செல்வாக்கை வீணுரவாரங்களில் செலவிடாமல், ஒருவரோடுஇன்னெருவர் மோதிக் கொள்ளாமல் பயன்படுத்தி வருகிறது. வடநாட்டு ஆதிக்கத்தை எதிர்க்க வலிவை திரட்டுவதுதான் நமது குறிக்கோள்! அதற்கு, எங்கிருந்தெல்லாம் பலம் சேரும் என்று உற்றுநோக்குவதுதான் நமது இன்றைய மார்க்கம்!

தெளிவும் திண்மையும் நமது இலட்சியத்தில் இருக்கிற காரணத்தால். அடிக்கும் கைகளே அணேக்கும் கட்டமும் கிடைக்கிறது நமக்கு. ஏசியோரும் கூட என்ருவது ஒரு நாள், நமது கொள்கையினேப் பேச வேண்டியவர்களாகி விடுகிருர்கள். அறிந்தோ, அறியாமலோ, நமது சக்தியின் அளவையும், நாம் காட்டும் அரசியல் கண்ணியத்தையும், நமது கொள்கையின் பாலுள்ள உண்மைத் தன்மையையும் எவரும் ஒப்பிட நேருகிறது. சட்டசபையில் 'பத்தாண்டு கால சமாதான ஒப்பந்தந்துக்கு', நிதியமைச்சர் அன்போடு அழைப்பு விடுத்தாரே, அதன் காரணம் இதுதான்.

வடநாட்டு டில்லி, அதிகாரங்கள் யாவையும் குவித்து வைத்திருப்பதையும், அதனுல் பல காரியங்கள் உருப்படாமல் போவதையும், நாம் கண்டித்து வருகிருேம்.

கார்டு, கவர், மணியார்டர் பாரங்களில்கூட இந்தி மொழியா எனவும், வேதனேயோடு கேட்டு வருகிருேம்.

இந்தக் கூற்றுகளே சமயம் வரும்போதெல்லாம், மறுப்பவர் நமது மத்ய கனரக அமைசர்! வடக்கு—தெற்கு என்று நாம் பேசுவது, அவருக்குபிடிக்காத ஒன்று. சென்னேயில் தேசீய சேமிப்பு தென்மண்டல முதலாவது மாநாட்டினேத் துவக்கி வைக்கையில்சொன்னுராம்.

"இந்த அமைப்பு, ராஜ்ய சர்க்காரிடமிருந்தால் தான் வெற்றி பெறக் கூடும்.ராஜ்ய சர்க்காருக்குத்தான் கிராமகளேப் பற்றி நன்ருகத் தெரியும். மத்திய சர்க்கார் எப்படி எல்லா இடங்களேயும் கவனிக்க முடியும்.''

என்று கேட்டிருக்கிருர்! இதன் பொருள் என்ன? விளக்கிச் சொன்னுல், திராவிடநாடு திராவிடருக்கே, என்பதுதான்!

இந்த ஒரு அமைப்பு மட்டுமல்ல, இதுபோல் எல்லாதுறை சம்பந்தமான அதிகாரங்களும் நமக்கு இருந்தால், நாம் எவ்வளவோ நன்ருக கவனித்து ஆட்சி நடத்தலாம்-என்கிருேம் நாம்.

இப்படியெல்லாம் பல சமயங்களில், எவ்வளவுதான் மூடி மறைத்தாலும், அவர்களேயும் மீறி உண்மை வெளிப்பட்டு விடுகிறது. காரணம், நாம், உருவான அடிப்பீடத்தின் மீது நிற்கிருேம்! நாம் தாங்கியிருக்கும் கொள்கை அப்படிப்பட்டது!

உருண்டோடி வரும் ஒவ்வொரு விஞடியும், நமக்கு, எதிர்காலத்தில் மிக மிக முக்கியமானதாயிருக்கலாம்.

இந்தி மொழிதான் ஆட்சி மொழி என்று தெளிவாக உத்தரவு பிறப்பித்து விட்டது மத்திய அரசு,

நமக்கு நிரம்ப வேலேயிருக்கிறது—அரசின் அட்டகாசத்தை, ஆணவத்தை, ஆதிக்கத்தை எதிர்க்க வேண்டியவர்களாக நாம்தான்இருப்போம். ஆகவே, நமது கழகத்தவர்கள், மிகவும் கவலேயோடும், கடமை பொறுப்போடும் காரியமாற்

(10-ம் பக்கம்பார்க்க)

வாழ்க மணமக்கள்!

அறிஞர் அண்ணு எம். ஏ., எம். பி. தலேமையில் 3—7—63 புதன் கிழமை காலே 9-மணிக்கு கா. வேழவேந்தன் பி. ஏ. பி. எல். அவர்களுக்கும் கே. எம். கண்ணபிரான் செல்வி: பானுமதிக்கும், வண்ணேயம்பதி பழனி முதலியார் தோட்டத்தில், சிறப்பாக திருமணம் நடைபெற்றது! கழக முன்னணி தோழர்கள் பலர் வாழ்த்துரை வழங்கினர். நாமும் மணமக்களே வாழ்க வாழ்க என வாழ்த்துகிருேம்!

இந்தி,யா? வேண்டாம்!

இந்தியாவில் ஏறத்தாழ பதினாறு மாநிலங்கள் இருக்கின்றன. இந்தப் பதினாறு மாநிலங்களில் நான்கு மாநிலத்தவர்களுக்கு மட்டுமே இந்தி தாய்மொழி ஆகும்.

ஏனைய பன்னிரண்டு மாநிலத்தவர்களுக்கு மட்டுமே உரிய ஒரு மொழியை, பதினாறு மாநிலத்தவர்கள் மீதும் ஆட்சி மொழியாக திணிக்கும் ஒரு முறையை ஜனநாயகக் கோட்பாட்டுக்கு ஒத்தமுறை என்று யாரும் கூற முடியாது.

இந்தி மொழி ஒன்று மட்டுமே இந்திய அரசாங்கத்தின் ஆட்சிமொழியாக ஆக்கப்பட்டால், இந்தி மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள்தான் தலைமைக் குடிமக்களாக ஆகிவிடுவார்கள். இந்தி மொழியைத் தாய்மொழியாக கொள்ளாத ஏனைய மக்களெல்லாம் இரண்டாந்தரக் குடிமக்களாகத்தான் இருக்கமுடியும்!

இந்தியை தாய்மொழியாகக் கொள்ளாதவர்கள் எவ்வளவுதான் இந்தி மொழியை வருந்தி வருந்திக் கற்றாலும், அதனைத் தாய்மொழியாக உடையவர்களோடு போட்டியிடுவது என்பது இயலாத செயல்! அது மட்டுமல்ல. இந்தி மொழியைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்களுக்கு இல்லாத பல சலுகைகள்—பல அனுகூலங்கள்—பல நன்மைகள்—பல செல்வாக்குகள், இந்தி மொழிக்காரர்களுக்கு ஏற்பட்டுவிடுவது இயற்கை.

அவ்வாறு ஏற்படக் கூடிய சலுகைகளுக்கு ஒரே ஒரு எடுத்துக்காட்டை மட்டும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறோம். இந்தி மொழி மட்டுமேஇந்திய அரசாங்கத்தின் ஆட்சிமொழியாக உள்ள நிலைமையில்,இந்தி மொழிக்காரர்கள் ஒவ்வொருவரும், இந்தி—ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளைக் கற்றால் போதும். ஆனால் ஏனைய மொழிகளைச் சார்ந்தவர்களோ தங்கள் தாய்மொழி, இந்தி மொழி, ஆங்கிலமொழி ஆகிய மூன்று மொழிகளைக் கற்றாக வேண்டும்.

கல்வித்துறையில் இந்தி மொழிக்காரர்களுக்கு இருக்கக் கூடிய சுமையைவிட இந்தி மொழியல்லாத பிறமொழியினருக்கு இருக்கக்கூடிய சுமை மிகம் கூடுதலாக இருக்கும். நாட்டில் உள்ள ஒரு சாராருக்கு மிகக் குறைவான சுமையும், பிற சாராருக்கு மிகஅதிகமான சுமையும் இருப்பது எவ்வாறு ஜனநாயகமுறையாகும்.

அதுமட்டுமல்ல. இந்திய அரசாங்கத்தின் ஆட்சிமொழி என்ற அந்தஸ்து—செல்வாக்கு—சிறப்பு—பெருமை—-பூரிப்பு, இந்தி மொழிக்கு இருக்கும்; ஆனால் பிற மொழிகளுக்கோ? அந்தப் பெருமையும் சிறப்பும் புகழும் செல்வாக்கும் இருக்க மாட்டா. மொழிகளுக்கு இடையே இத்தகைய பாரபட்சம் இருப்பது ஜனநாயகமுறை ஆகுமா? ஆட்சியாளர்கள் அன்பு கூர்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்தியாவின் பல்வேறு மொழிகளுக்கு இடையேயும் பல்வேறு மக்களுக்கு இடையேயும் காட்டப்படுகிற இந்த வேறுபாடு — ஜனநாயகக் கொள்கைக்கு மாறான வேறுபாடு நீங்க வேண்டுமானால், இந்திய அரசாங்கத்தின் ஆட்சி மொழிகளாக, இந்தியாவின் தேசீய மொழிகளாக, அரசியல் திட்டத்தில் குறிப்பிட்டுள்ள பதினான்கு மொழிகளும் ஆக்கபடவேண்டும். அத்தகைய திட்டம் நிர்வாக நடைமுறைக்கு ஒத்துவராது என்று அரசாங்கம் கருதுமானால், ஆங்கிலம் ஒன்றை மட்டுமே இந்தியாவின் ஆட்சிமொழியாக வைத்திருக்க முடிவு செய்யப்பட வேண்டும்.

ஆங்கிலம் ஒன்று மட்டுமே ஆட்சி மொழியாக இருக்குமானால், இந்தியாவிலுள்ள எல்லா மக்களும், தங்களுடைய தாய் மொழி, ஆங்கிலமொழி ஆகிய இரண்டே மொழிகளைக்கற்றால் போதும். அத்தகைய திட்டத்தில் சிலர் இரண்டு மொழிகளை பிறர் மூன்றுமொழிகளைகற்பது என்கிற இழிநிலை இராது.

இந்திய அரசாங்கத்தார் அன்பு கூர்ந்து இந்த உண்மையை ஆர அமர இருந்து சிந்தித்துப் பார்த்து ஆங்கிலத்தைமட்டுமே இந்தியாவின் ஆட்சிமொழியாக ஆக்க முன்வர வேண்டும். அப்படி முன் வருவதுதான் இந்தியாவின் எதிர்காலத்தை, ஒளி உள்ளதாக—புகழ் மிக்கதாக—பெருமைநிறைந்ததாக——-சிறப்பு வாய்ந்ததாக ஆக்குவதற்கு உரிய வழியாகும்.

—"ஆரம்பக்கல்வி"

காமராசரே என்ன சொல்கிறீர்!

"வீடு வீடாகப் போய்க் கடைசி நாளாகக் காமராசர் ஓட்டு வேட்டை ஆடினர். இன்று காலையிலேயே காமராசர் ஓட்டு வேட்டைக்குக் கிளம்பிவிட்டார். திருவண்ணுமலையைச் சுற்றியுள்ள கிராமங்களில் வீடு வீடாகப் போய் ஓட்டு வேட்டையாடினர். இன்று இரவு முழுவதும் ஓட்டு கேட்டார்."

28—6—63
மாலைமுரசு.

0

"நீங்கள் பத்ராசலம் பிள்ளைக்கு ஓட்டுப் போடவேண்டாம். காங்கிரஸ் லட்சியத்துக்கு ஓட்டுப் போடுங்கள் என்று கேட்கிறேம்"

காமராசர்
திருவண்ணுமலையில் [27—6—63]

0

"திருவண்ணுமலை தொகுதி முழுவதும் சுற்றுப் பயணம் செய்தேன். நிறைய தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில பேசினேன். வீடு வீடாகப் போய் ஓட்டுக் கேட்டேன்... நிச்சயமாக திருவண்ணுமலை.யில் தி. மு. க. கழக அபேட்சகரைவிட பத்ராசலம் பிள்ளை 5 ஆயிரம் ஓட்டுகள் அதிகம் வாங்கி வெற்றி பெறுவார். இது உறுதி"

அமைச்சர் மன்ருடியார்
25-ல் சென்னை நிருபர்களிடம்

0

"தி. மு. கழக தேர்தல் சின்னமான உதய சூரியனில் 6 கோடுகள் இருக்கின்றன. இதில் ஒரு கோடு நாங்குனேரியிலும், மற்ரெரு கோடு போடியிலும் அடிபட்டு விடடன. திருவண்ணுமலையில் ஒரு கோடு அடிபடப் போகிதது. மீதி இருப்பது 3 கோடுகள்தான்! திருவண்ணுமலையில் தி. மு. கழகம் தோற்பது உறுதி."

அமைச்சர் வெங்கட்டராமன்
ஜூன் 24-ல் திருவண்ணுமலையில்

0

"காமராசர் நேற்று திருவண்ணுமலை போனர். இன்று முதல் இடைவிடாமல் 4 நாட்கள் சுற்றுப் பிரயாணம் செய்கிருர். அதுபோல மந்திரிகள் பூவராகன், கக்கன், மசீத் ஆகியவர்களுப் தீவிர தேர்தல் பிரச்சாரம் செய்து வருகிருர்கள்."

செய்தி, 26-ல்

0

"திருவண்ணுமலையில் காங்கிரஸ் வெற்றி பெற வேண்டும் என்று சாமி கும்பிட்டுவிட்டு போடியில் வெற்றி பெற்ற காங்கிரஸ் எம். எல். ஏ. சவுந்திரவேல் நேற்று திருவண்ணுமலைக்குப் புறப்பட்டுப் போனர். திருவண்ணுமலைக்குப் புறப்படுமுன் பழனி கோவிலுக்குப் போனர். காங்கிரஸ் ஜெயிக்க வேண்டும் என்று வேண்டிக்கொண்டு கிளம்பினர். 40 தொண்டர்களுடன் சென்னை வந்தார். நேற்று முதல் மந்திரி காமராசரைச் சந்தித்தார். பிறகு திருவண்ணுமலைக்குப் போனர்"

'ஜூன் 26 செய்தி

0

"திடீரெனத் தேர்தலுக்கு முதல் நாள் திருவண்ணுமலைக்குக் குடிநீர் கொண்டு வருவதற்கான 41 லட்ச ரூபாய்த் திட்டம் ஒன்றைச் சர்க்கார் அனுமதித்திருக்கிறது. இதனை நோட்டீசுகள் போட்டு திருவண்ணுமலை காங்கிரஸ் கட்சி விளியோகித்துள்ளது!"

ஜூன் 25 செய்தி

(4—ம் பக்கத் தொடர்ச்சி)

கத்தை ஒழிப்பதற்கு!

கைக்கூலி கொடுத்த காமராசர் பிறகு கலங்கினுராம்! இவர்கள் மீதும் நம்பிக்கை இல்லையாம்! "மந்திரி" என்ற நமக்கே இல்லாத செல்வாக்கு ஆசிரமத்து அநாதைகளுக் கேது என்று சொன்னுராம்!

"ஏதோ நமக்கும் கூட்டம் வேணும்லே; அதுக்குத்தான் இதுகளுக்கு கூலி; கூச்சல் போடட்டுமே, நம்ம பேரையாவது விளம்பரம் செய்துக!

எதைச் செய்தாலும் எனக்கு நம்பிக்கை இல்லை! இந்த வெங்கட்ராமன் வேற 5 ஆயிரம் ஓட்டுலே வெற்றின்னு பெரிய ஜோசியராட்டம் தன் பரம்பரைத் தொழிலை காம்பிச்சுட்டாரு!

என்ன பண்றதுண்ணு ஒண்ணும் புரியலேன்னு யோசிக்க யுக்தி பிறந்தது! நாம்தானே போலீஸ் மந்திரி என்ற நினைவு வந்ததாம்!

போலீஸ் இன்ஸ்பெக்டர்களை அழைத்தார், ஆணையிட்டார்! காங்கிரஸ் வெற்றிபெற அதிகாரத்தைப் பயன்படுத்துங்கள் என்ருர்!

மந்திரி ஆணையிட்டார்; செய்தார்கள்சிரமேற்கொண்டு போலீஸ் அதிகாரிகள். புதிய ஆசை பிறந்தது. பழைய குழாய்களைப் பெயர்த்தெறிந்தார்; புதிய குழாம்களைப் போடச் சொன்னுர்; திறப்பு விழா நடத்தினர். பழைய பாலங்களை இடிக்கச்சொன்னுர் புதிய பாலத்தைக் கட்டினுர்! திறந்தார்! மக்கள் தந்த வரிப் பணத்தில் திருவண்ணுமலையில் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற காமராசர்!காங்கிரசின்சாதனை இதுதான் என்ருர் மக்களிடம்!

ஜம்பம் பலிக்கவில்லை புரிந்து கொண்டார் காமராசர்! ஜனநாயகப் போர்வையில் ஒளிந்து கொண்டு அகிம்சாக் கொள்கையைப் போதித்துக் கொண்டே அராசக முறையை கையாண்டார் காமராசர்! இதிலும் நம்பிக்கையற்ற காமராசர்! பணக்காரர்களையும்வரவழைத்தார்!! ஓட்டுக்கு ரேட்டு பேசப்பட்டது. 'காஞ்சிபுரம்' செய்யப்பட்டது!!

திருவண்ணுமலை மூன்று திங்களாக அல்லோகலப்பட்டது; ஆட்சியாளர்களின் அம்புகள் ஒருபுறம். சில்லறைகளின் விஷமங்கள்ஒருபுறம்! இத்தனை கொடுமைகளையும் எதிர்த்து திருவண்ணுமலையில் கழகம் போட்டியிட்டது.

கொடுமைகள் பல தந்தார்கள். துயர்களை இழைத்தார்கள். கத்தியை நீட்டினுர்கள். கைது செய்தார்கள். காவலில் வைத்தார்கள்! இத்தனைக்கும் அஞ்சாது உழைத்தனர் அருமைத் தோழர்கள்; அண்ணவை மனதிலெண்ணி அயராது பாடுபட்டனர். கத்தியை நீட்டி குத்தவந்தார்கள்.குத்து, எங்கள்குருதியைகுடிக்கிருயா? ஆணவ தாகம் தணியும்வரை குடி என்ருர்கள் தியாகசீலர்கள். அடிக்கிருயா.........உன் கை வலிக்கும் வரை அடித்துக் கொள் என்ருர்கள்" களத்திலே கட்கமேந்தி இறங்கியவீரன் பரிபாய்கிறதே! ஈட்டி குத்துகிறதே என்று கலங்காதுகாரிய சித்தியே தன் இலட்சியம் என்று எப்படி இருப்பானே அதேபோல் கழகத் தோழர்கள் கலங்கவில்லை; உறங்கவில்லை; உண்ணவில்லை. உழைத்தார்கள். அயராதுழைத்தார்கள். மக்கள் முன் சென்ருர்

(9—ம் பக்கம் பார்க்க)

விற்பனையாளர்கள் கவனிக்க

திருவண்ணுமலை தேர்தலின் காரணமாக சென்ற 28 - 6 - 63-ந் தேதி இதழ் வெளிவரவில்லை.

ஜூன் மாதம் அனுப்பப்பட்ட பிரதிகளுக்குரிய தொகையை கடிதம் மூலம் தெரிவித்துள்ளோம். அத் தொகையை உடன் அனுப்பித் தருவீர்கள் என நம்புகிறேம்.

சென்றமாதத்திற்குரிய பட்டியல் இவ்வார இதழுடன் அனுப்பி வைத்திருக்கிறேம்.

"அறப்போர்" அபிராமபுரம், சென்னை-18.

வாழ்வளிப்பீர்!

அ. மாசிலாமணி

"ஏந்த நாட்டில் நேர்மையும் நீதியும் புறக்கணிக்கப் பட்டதோ——அந்த நாடு கொடுங்கோலர்களின்கூடாரம் தான்" என்ருர் அகஸ்ட்டீன்.

எந்த நாட்டில் அநீதி தாண்டவமாடுகிறதோ--அந்த நாட்டில் வறுமை தாண்டவ மாடும் என்று ஓர் அறிஞர்கூறியுள்ளார்.

நாட்டு மக்களை நசுக்கி தொழிலாளர்களின் உயிரினும் மேலான தொழிலுக்கு உலை வைத்து தன் ஆதிக்கத்தை நிலைநாட்ட நினைக்கிறதோ—அந்த நாடு தன் அந்திய காலத்திற்கு தானுகச் சென்றுவிட்டது என்பது அறிஞர் பெருமக்களின் முடிவு.

இந்தியா முழுதும் நான்கு திங்களாக நாடெங்கும் பொற்கொல்லர்களின் வேதனைக்குரல் கேட்டுக்கொண்டேஇருக்கிறது நாள் தவருது பொற்கொல்லர்களின் குடும்பங்கள் பசிக் கொடுமையால் பரிதவித்துச் சாகிருர்கள்.பலர்பாழும்கிணற்றிலே விழுந்தும் மரங்களிலே தூக்கு மாட்டிக் கொண்டும் வாழபிறந்தவர்வாழ முடியாது சாகிருர்கள்! இதைப்பற்றி இந்த நாட்டை ஆள்வோர் கவலைப்படவில்லை; இடைத்தேர்தலில்வெற்றிபெற, கொடுமைகள் பல செய்து இழிசெயல்களையும் மனம்கூசாது செய்தனர். அமைச்சர்களே இந்தச் செயலில் ஈடுபட்டிருப்பதை நினைத்துப் பார்த்தால் நெஞ்சம் குமுறுகிறது.

மொரார்ஜி தேசாய் திட்டம் தீட்டினுர்; தன் அதிகாரத்திற்குள் சிக்கியிருக்கும்மாநிலஅரசுகளை சட்டத்தை நிறைவேற்றச் சொன்னுர், நிதி மந்திரி நமது மதி மந்திரி அருமையான திட்டம் தீட்டிவிட்டார்; இதுவே இனிச் சட்டம்; ஆகவே 22 காரட் நகை போட்டால் உங்களுக்குச் சிறைத் தண்டனை! இனி எல்லோரும் 14 காரட் நகைகளைத்தான் அணியவேண்டும் என்ற தங்கத் திருமகனுரின் ஆணையை நிறைவேற்ற முனைந்தார்கள்.

தங்கக் கட்டுப்பாடு சட்டம் நடைமுறைக்கு வந்து நான்கு திங்கள் கடந்து விட்டது. இந்த சட்டதால் வாழ முடியாது வதைப்படும் பொற்கொல்லர்களுக்கு இதுவரை மாநில சர்க்கார் செய்தது என்ன?

பொற்கொல்லர்கள் கண்ணீரும் கம்பலையோடு வாழ்க்கையோடு போராடிக் கொண்டிருக்கிருர்கள், அந்த பொற்கொல்லர்களுக்கு புனர்வாழ்வளிக்க இது நாள்வரைமத்திய அரசு செய்தது என்ன? அவர்களின் ஒரே தொழிலுக்கும் உலை வைத்த உத்தமர் மொரார்ஜி தேசாய் பொற்கொல்லர்களின் வேதனையை எப்படி அறிவார்; அவர் சுக போக வாழ்வில் மிதப்பவர்;

வறுமையின் கொடுமையை காங்கிரஸ்காரர்களறிய மாட்டார்கள்! ஊரை அடித்து உலையில் போடும் கூடாரம்தானே காங்கிரஸ் முகாம்! அந்த முகாமின் முதல்வர்,மத்திய அமைச்சருக்கு சட்டம் தீட்டத் தெரியுமே தவிர அதன் விளைவுகளை அவர் அறிய மாட்டார்; அவருக்கு அறியும் திறனும் இல்லை.

பதினுன்கு அடுக்கு மாளிகையில் பற்பலநவீனவசதிகளோடு உல்லாசமாய் வாழும் அமைச்சர் "தங்கத்தின் மேல் ஆசை வைப்பது எவ்வளவு பெரிய முட்டாள்தனம்" நான் நினைத்ததை செய்வேன் என்று ஆணவமாகப்பேசியுள்ளார்! இவரை ஆணவமாக பேச வைத்தது யார்? நாம் அறியாது செய்த பிழை இப்பொழுது நம்மையே—நம்மின் வாழ்விற்கே உலை வைக்கிறது.

"ஐயா நீங்கள் எதையும் செய்யலாம். நீங்கள் இருக்க வேண்டியஇடத்தில் இருக்கிறீர்கள். உங்களை அந்த இடத்திற்கு நாங்கள் அனுப்பினேம்; அதிகாரம் உங்கள் கையில்"

நாங்கள் உங்களைக் கேட்பது பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏதாவது செய்ய முன் வந்ததா ஆட்சி? இதைப் பற்றிதாங்கள் தானே நன்முடிவு கூற வேண்டும்; ஏனென்ருல் நீங்கள் அமைச்சராக இருப்பதால் தான் கேட்கிருேம்;

நாட்டின் பொருளாதாரத்தைப் பெருக்க தங்கச்சட்டம் கொண்டு வந்தீர்கள். ஐந்தாண்டுத் திட்டங்கள் பல தீட்டினீர்கள், அதிலும் பொருளாதாரம் முன்னேற்றம் இல்லை. தங்கக் கட்டுப்பாடு திட்டத்தால் எந்த அளவு பொருளாதாரம் முன்னேறியுள்ளது என்பதும் தெரியவில்லை.

சர்க்கார் செய்யும் ஒரு சட்டம் பல பேருடைய வேலை வாய்ப்புகளை அழித்து விடுகிறதென்ருல் அது மக்களாட்சிக்கு—பொது நலனுக்கு உகந்ததல்ல; மக்களின் நல் வாழ்விற்காகத்தான் சட்டம் தீட்டப்படுகிறதே தவிர அவர்களை சாவின் முனைக்கு அழைத்துச் செல்வதற்கல்ல!

"கட்டாயசேமிப்புத் திட்டம் ஒன்றும்சட்டத்தின் துணையால் நிறைவேற்றியுள்ளார்கள்! கட்டாய சேமிப்புத் திட்டத்தை அமுல் படுத்த எத்தனை அலுவலக குமாஸ்தாக்கள் தேவை! அவர்களுக்கு எவ்வளவு சம்பளம் கொடுக்க வேண்டும்! எவ்வளவு பாஸ் புத்தகங்கள் அச்சடிக்க வேண்டும்! இதையெல்லாம் ஆய்ந்து அறிந்து செய்தார்களா?இதனுல்பொருளாதார வசதி பெருகும் என்று மொரார்ஜி நன்கு அறிந்துசெயல்பட்டால்அவரது முயற்சி வெற்றி பெறும்!

தங்கக் கட்டுப்பாடு திட்டத்தை அமுல் படுத்தினுர் அமைச்சர்! நாட்டில் தங்கம் பதுக்கப்பட்டது. கள்ளக் கடத்தல் அதிகமாக நாட்டிலேநடைபெறுகிறது. இதைவிட பல லட்சக்கணக்கான குடும்பங்கள் பரிதாபமாகச் சாகிருர்கள்!

இதையெல்லாம் ஆராய்ந்துப் பார்த்துத்தான் அமைச்சர் இந்த சட்டத்தை நிறைவேற்றினுரா? என்ருல் இல்லை என்றே எண்ணத் தோன்றுகிறது. 14 காரட் நகை என்ருல் மக்கள் வெறுக்கிருர்கள்.அதை மக்கள் வாங்கவே மறுக்கிருர்

(11-ம் பக்கம்பார்க்க)

முழவொலி கேட்கட்டும்!

(அன்பழகன்)

முழவொலிகள் முழங்கட்டும் திராவிடத்தின்
முதுமைமிகு மானமதை காக்க இந்திக்
களைபிடுங்கி தமிழ் காப்போம் பிறந்த நாட்டின்
கண்ணியத்தை உயிர்கொடுத்தும் வாழவைப்போம்
இழிசெயலால் வடவர்மொழி ஏணைஏற
எள்ளளவு இடமேனும் கொடுத்துவிட்டால்
எழிற்றமிழின் கலையாவும் அழிந்து போகும்
எலி தனக்கு அடங்கிவிட்ட புலியாய் ஆவோம்

பிறந்ததடா அண்ணுவின் கட்டளைதான்
பீறிடுதே உள்ளெல்லாம் உணர்ச்சி வெள்ளம்!
திருவிடத்தீர் தினவெடுத்த தோள்கள் எங்கே?
திக்கெட்டும் ஒலித்திடுமாப் புகழுமெங்கே?
அறுபதினை நோக்கிடுநம் அண்ணு தானும்
ஆர்ப்பரித்து நிற்கின்ருர் சிறைக்கு ஏகு
பருதிஎன எழுந்திடுவீர் இந்தி என்பாள்
பற்கள்தனை எண்ணவைப்போம் வாருங்கள் இன்றே

நொச்சிப்பூ உதிர்கின்ற இரவு நேரம்
நுணங்கியநற் பாவையுடன் காணும் இன்பம்
பச்சைமணிப் புனலாடும் திராவிடத்தின்
பாங்கினிலே உளங்களிக்கும் பண்பும் நாட்டில்
துச்சமென விட்டெழுவாய்; துவங்கும் கொள்கைச்
சுடர் அண்ணு வழிகாட்ட கலைஞர் போன்ற
அச்சமிலாச் சீயங்கள் படைநடத்த
ஆர்த்தெழுவோம் திராவிடத்தீர் வெல்வோம்
வாரீர்!!

வாழ்வளிப்பீர்...

(8-ம்பக்கம் தொடர்ச்சி)

கள். இதனுல் எவ்வளவுவியாபாரம் தடைபடுகிறது? எத்தனையோ கடைக்காரர்கள் பெரும் நஷ்டமடைந்திருக்கிருர்கள்.

கொண்டு வந்த சட்டம் நிறைவேறிற்று என்றுல் அதுவும் இல்லை! மக்கள் விரும்பி ஏற்றுக்கொண்டால்தான் எந்தச் சட்டமும் அமுலுக்கு வர முடியும்! ஆட்சியாளர்கள் தீட்டிய சட்டத்தை மக்கள்விரும்பவில்லை! விரும்பாத சட்டம் தேவையில்லை! மக்கள் விரும்புகிறபடியோ—மக்கள் நலன் கருதிய சட்டமோ இந்திய அரசியல் சட்டத்தில் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை.

தங்கத் திருமகனுர் தன் சட்டம் நிறைவேருது கண்டு ஓலமிடுகிருராம்! சட்டம் நிறைவேறவில்லை; அதற்கு மாநில அரசுகள் ஒத்துழைப்புத் தராததே காரணமாகும்; மாநில அரசுகள் அதன் முதல்வர்கள் தங்கச் சட்டத்தை அமுல்படுத்த தீவிர முயற்சி எடுக்கவில்லை. ஆகவே மாநில அரசின் முதல்வர்கள் தயவு செய்து ஒத்துழைப்புத் தர வேண்டும் என் சட்டம் நிறைவேற என வேண்டியுள்ளாராம்!

சட்டம் நிறைவேற்றும் பொழுது மாநில அரசுகளின் விருப்பத்தைக் கேட்கவில்லை; மாநில அரசு முதல்வர்கள் தைரியத்தோடுமொரார்ஜியை கேட்கலாம்! அதிலும் சென்னை மாநில முதலமைச்சர் இடைத் தேர்தல்களில் சென்று முறைகேடான முன்றயில் நடந்து கொள்வார்! சட்டத்தை தூசென மதித்து சட்டத்திற்கு புறம்பான செயல்களில் ஈடுபடும் இவருக்கு அமைச்சர் பதவி; சட்டத்திற்குபங்கமாக யாராவது நடந்தால் அவர்களுக்கு சிறை! அபராதம்! நாட்டின் முதல்வரே சட்டத்தைக் காலால் மிதித்தெறிந்து விட்டு சட்டத்திற்குபுறம்பான—முற்றிலும் மாறுபாடான செயல்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு உரிய தண்டனைஎன்ன?

நீதிக்கு வாதாட திறனில்லாதவர்! மத்ய அரசின் ஏஜெண்டு தான் நம்மின் முதல்வர்!

மாநில அரசுவின் விருப்பத்தை நிறைவேற்றும் நல்லெண்ணம் இருக்குமானுல் தமிழகப் பண்பாட்டின்படி தாலிக்கு மட்டும் 22காரட்டில் அனுமதி கொடுத்திருக்கலாமே மொரார்ஜி செய்தாரா? தாலிக்கு ஏன் 22 காரட்தேவையில்லை என்று சட்டத்தை நீட்டினுர்?

தன்னை மதியாத மத்திய அரசின் போக்கை கண்டிக்கு முகத்தான் காமராசரை தவிர மற்ற மாநில முதல்வர்கள் சட்டத்தை மறைமுகமாக எதிர்த்துள்ளார்கள். ஆகவே அவர்களைப் பாராட்ட வேண்டும்; இதைப் போன்று தங்களை மதியாத மாநில அரசுவின் ஒத்துழைப்பைப் பெற சாகசம் செய்கிருர் மொரார்ஜி. கட்டாயச் சேமிப்புச் சட்டம் மக்கள் ஆதரவைப்பெறுமா என்பதும் ஐயப்பாடே!

எந்தக் காரியத்தைச் செய்வதாக இருந்தாலும் அந்தக் காரியத்தால் உண்டாகும் லாபத்தையும்—அதனுல் வரப்போகும் நஷ்டங்களையும் நன்ருக எண்ணிப் பார்த்து செயல்பட வேண்டும்!

குற்றம் பழி வருமுன் அதை நன்கு அறிந்து தன்னைக் காத்து கொள்ளக் கூடிய அறிவு இல்லாதவர்கள் ஆட்சியிலிருப்பது வாழ்க்கை பெருநெருப்பின் பக்கத்திலே வைத்த வைக்கோல் போர் போல பாழ்பட்டுப் போகும்!

அதைப்போல்தான் மத்திய அரசு ஆராயாது தீட்டிய சட்டத்தால்—பல குடும்பங்கள் பரிதவித்துச் சாகிறது; பரிதவித்துச் சாகும் பொற்கொல்லர்களுக்கு பாதுகாப்பு அளிப்பது ஆட்சியாளரின் கடமை! இதை இது நாள் வரை ஆட்சியாளர் செய்யாதது ஏனே? உடன் பொற்கொல்லர்களுக்கு வாழ்வளிப்பீர்!!

கோவலன் ஒருவனுக்காக ஆயிரம் பொற்கொல்லர்கள் பழிவாங்கப்பட்டதாகக் கதை!

மொரார்ஜி ஒருவரினுல் லட்சக்கணக்கான பொற்கொல்லர்கள் பழி வாங்கப் படுகிருர்கள்!

பழி வாங்கப்பட்ட பொற்கொல்லர்களின் வேதனைக் கண்ணீரே இந்திய ஆட்சியைக் கவிழ்த்துவிடும்!!

திருத்தம்

'வாழ்வளிப்பீர்' என்ற கட்டுரை அச்சிடப்பட்டிருக்கும் பக்கத்தின் எண்ணை 8 பக்கம் என்று திருத்திக் கொள்ளவும். அக்கட்டுரையின் தொடர்ச்சியை 9-ம் பக்கம் பார்க்க என்றும் திருத்திக் கொள்க.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கள். கழகத்தின் உயரிய நோக்கையும் சீரிய கொள்கையையும் செப்பினுர்கள்.

"கண்ணீரோடு பிறந்த கழகக் காளையர்கள் கண்ணீர் விட்டார்கள். காமராசரின் அதிகார வெறியால், கலங்காது ஜனநாயகத்தை காப்பாற்றினுர்கள்!

திருவண்ணுமலை மக்கள் காமராசரின் ஆணவத்திமிரை அதிகார வெறியைஅறிந்துகொண்டார்கள். காங்கிரஸ் கட்சியின் ஊழலைப் புரிந்து கொண்டார்கள். வரிக்கொடுமை தாளாது வாடியோரும், தங்கக் கட்டுபட்டால் தவித்தோரும், ஏழைக்குடி மக்களும் பாட்டாளி வர்க்கத்தினரும் தாய்க் குலத்தினரும் தரங்கெட்டோரின் ஆட்சியின் திறனை புரிந்து கொண்டனர்

அவர்கள் புரிந்து கொண்டதின் பலனுக கழகம் வெற்றி வாகை சூடியது! ஏழைக் குடும்பத்தின் பிள்ளை ப.உ.ச.வெற்றி பணபலம் கொண்ட பத்ராசலம் தோல்வி!

காமராசரின் ஆணவ போக்கிற்கு திருவண்ணுமலை மக்கள் நல்லதோர் பாடம் புகட்டியுள்ளார்கள், ஆயிரத்து நானூற்றிருபத்தைந்து வாக்குகள் அதிகம்பெற்றுகழகம் வெற்றிப் வாகை சூடியுள்ளது.

இனியும் காமராசரின் ஜால வித்தைகள் செல்லாது! "உன் பணம் செல்லாதது: அதிகாரத்தால் எதையும் சாதிக்க நினைப்பது மடமையாகும். எங்கு நீதியும் நேர்மையும் பண்பாடும் இருக்கிறதோ......எங்கு எங்களுக்காக எங்கள் குரலை எந்த மன்றத்திலும் எடுத்துரைக்கும் திறனிருக்கிறதோ அவர்களுக்கே எங்கள் வாக்கு என்று அறுதியிட்டுச் சொல்லிவிட்டார்கள் மக்கள்.

கழகம் பெற்ற வெற்றி மகத்தானது மட்டுமல்ல; வரலாற்றின் முக்கிய அங்கம் திருவண்ணுமலை வெற்றி. கங்கணம் கட்டிக்கொண்டவர்கள் காப்பு களைந்திருப்பார்கள் கழகத்தின் வெற்றி கண்டு. கழகத்தின் வெற்றிக்கு அயராதுழைத்த அரும்பெரும் கோழர்களுக்கு நம்முடைய பாராட்டும் நன்றியும்!!

—அ. மாசிலாமணி

கக்கனுரே! பூவராகனே!!

"அரிசனங்களும் வன்னியர்களும் பணத்திற்கு அடிமையாகிவிட்டனர் . . ."

என்று திருவண்ணுமலையில் தோற்ற தோழர் பத்ராசலம் ஒரு அறிக்கையில் கூறுகிருர்! காங்கிரசாலேயே கதி மோட்சம் வரும் என்று நம்பியிருக்கும் ஆதித் திராவிடப் பெருங்குடி மக்களே, வன்னிய இனத்தாரே, இதைவிட உங்களுக்கு அவமானம் வேண்டுமா?

ஓடிஓடி காங்கிரசுக்குப் பாடுபட்ட கக்கன் அவர்களே, தோழர் பூவராகனே! உங்களது சமூகத்திற்குச் சூட்டப்படும் இந்தப் பழிச் சொல் கண்டும் பதருமலிருப்பதேன்? "காங்கிரசால்தான் வன்னிய சமூகம் முன்னேறும்", என்ற பூவராகன் எங்கே? காபி குடிக்க வைத்த காங்கிரஸ் என்று ஊரெல்லாம் பேசிய கக்கனுரே உமது குடிபண ஆசைப் பிடித்ததாமே, உமது வேட்பாளர் கூறுகிருரே? என்ன பதில் சொல்கிறீர்! இதுதானு உம்மை ஆதரிக்கும் பழங்குடி பெருமக்களுக்கு நீர் பெற்றுத்தரும் பரிசு?

தென்றல் என எண்ணினர்! அவளோ, மாபெரும் அரசுக்கே புயலானள்!

அரங்கண்ணல்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வழி! ஒட்டலுக்குள் நுழைந்த டாக்டரின் கண்களில் கீலர் பட்டாள். எடை போட்டார் டாக்டர்! சிலது தொட்டதும் துவளும், சிலது கிராக்கியோடு படியும், சிலது தன்னலேயே நெருங்கும் என்று பல ரகங்கள் உண்டல்லவா? கீலர் தன்னலே நெருங்கும் ரகம்! ஆதலால், சிரமம்ஏற்படவில்லை டாக்டருக்கு,"நீ சிங்காரமாக இருக்கலாம்.சம்மதமா?" என்று கேட்டார். டாக்டர். சிரம் அசைத்தாள் கீலர். கிளப்பைவிட்டுக் கிளம்பினள்!!

டாக்டர் வார்டு, சாதாரண மனிதரல்ல, இலண்டன் வட்டாரத்துக்குப் பெரிய மனிதர்! அவர் முழுப் பெயர் டாக்டர் ஸ்டீபன் வார்டு என்பதாகும். அவருடைய ஓவியத்தைக் கண்டு, அவரின் நோயாளிகளில் ஒருவரான சர்ச்சிலே பாராட்டினரென்றல் சொல்லவேண்டுமா? சாதாரணமாக விஞ்ஞான மூளையுள்ளவர்களுக்கும் ரசனை உள்ளம் கொண்டகலைஞர்களுக்கும் ஒத்து வராது என்பார்கள்! டாக்டர் கலைஞர்—கலையைப் பூரணமாக ரசிக்கவே அவர் டாக்டரானர் போலும்!! உலகமே புகழும் சர்ச்சில் துரைமகனுருக்கு மட்டுமல்ல, அவர் டாக்டர்! உலகமே வியக்கும் பிரபல திரைப்பட நடிகை எலிசபெத்டேலர் என்பாளுக்கும் அவர்தான் டாக்டராம்!! அதுமட்டுமல்ல, இளவரசி, மார்க்கரெட் காதலித்து மணம் புரிந்து கொண்ட லார்டு ஸ்னேடன், பிரிட்டிஷ் மாராணியின் கணவர், எல்லாருக்கும் இவர் டாக்டராம். இவர்களை யெல்லாம் வாடிக்கைக் காரர்களாகப் பெற்றிருந்த டாக்டர் என்றல் சாமான்யமா!!

டாக்டர் வார்டுடைய மாளிகையில் பாகிஸ்தான் அதிபர் அயூப்கான் கூட பல நாட்கள் தங்கியிருந்திருக்கிறர். இருவரும் அவ்வளவு நண்பர்களாம்! டாக்டர் வார்டு தயாரித்த பலவிதமான ஓவியப் புகைப் படங்களை, அயூப்கான் கூடவே கொண்டுபோனராம், பாகிஸ்தானுக்கு.

மிகப் பெரிய மனிதர் இந்த டாக்டர்! உலகிலேயே, மிகப் பெரிய மனிதர்களுக்குத்தான் மிகமிகச் சாதாரணமான சபலங்கள் வரும் போலும்!!

கீலருக்கு மட்டுமல்ல, டாக்டர் பல பெண்களுக்கு 'உதவி' செய்திருக்கிறர். பத்தாண்டுகளுக்கு முன்பு இந்தியச் சிற்றரசான கூச் பேரார் மன்னருக்கு விக்கி மேரியா எனும் காதலி கிடைத்தது, டாக்டரின் அருள் வழியால்தானும்! அதேபோல பிரான்வென்புக் எனும் அழகிக்கு ஆஸ்டர் பிரபுவின் மனையாட்டி என்கிற உரிமை கிடைத்ததும் டாக்டரின் திருவருள்தானும்!!

இந்த ஆஸ்டர் பிரபுவின் 'எஸ்டேட்டில்' தான் அழகான விடுதி யொன்றைப் பெற்றிருந்தார் டாக்டர். இந்த எஸ்டேட்டுக்குள் அருமையான ஏரியொன்றுண்டாம்— அங்கே குளிக்கலாம்! குதிக்கலாம்! நீந்தலாம்! படகுச் சவாரி செய்யலாம்!! பலருக்கு அது ஒரு ஓய்வு நேர உல்லாசபுரியாயிற்று!. ஒருசமயம், ஆஸ்டர் பிரபுவின் மாளிகையில் திருட்டொன்று நடந்துவிட, அதை விசாரிக்கச் சென்ற போலீசின் கைகளில் விதவிதமான நிர்வாணப் புகைப்படங்சள் டாக்டரின்குடிலில் கிடைத்தனவாம். அவைகளில் ஒன்று கீலருடையதாம்! கட்டுரையின் முகப்பில் பாருங்கள்—— படத்தைப் போடவே, அஞ்சுகிறேம், நாம். ஆனல், இப்படிப் படம் எடுக்கவும் அனுமதித்தாள் என்றல், அவள் எப்படிப்பட்ட இதயம் கொண்டவளாயிருக்க வேண்டும்?

டாக்டரின் 'உல்லாசபுரி'க்கு பெரிய பெரிய மனிதர்கள் வருவதுண்டு. ஒரு சமயம், 1961-ல் பாதுகாப்பு மந்திரி புரொப்யூமா தனது மனைவியுடன் ஒரு விருந்துக்கு அழைக்கப்பட்டார். விடுதியில் கீலரும் இருந்தாளாம்! பிறகோர் சமயம் டாக்டரின் முன்னேற்பாட்டின்படி ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு விருந்தில் புரொப்யூமாவோடு அயூப்கானும் அவர்களிருவரோடு புதிதாக ஒரு இராணுவத் தளபதியும்கலந்து கொண்டனராம்! இளமைப் பொலிவும், திறனுமிக்க, யூகின் ஐசனேவ் என்கிற இரஷ்யக் கடற்படையாளன்தான் அத்தளபதி. இந்த விருந்தில் கலந்துகொண்ட மூன்று பெண்களில் ஒருத்தி, கீலராம்!

டாக்டரின் உல்லாச புரியில் பிறகு நடந்த விருந்துகளில் பற்பல பெரிய மனிதர்களுடன் புரொப்யூமா கலந்து கொண்டிருக்கிறர். ஒவ்வொரு விருந்துக்குப் பின்னும் ஓடுவராம்! பாடுவராம்! இழுப்பராம்! தள்ளுவராம்! குளிப்பராம்! குதிப்பராம்! கோணங்கி சேட்டைகள் அத்தனையும் செய்வராம்! அவ்வளவுக்கும், பெண்கள், சளைக்காமல் ஈடு காடுப்பராம், அங்கு. அவர்களில் தேர்ந்தவள் கீலர் தென்றல் என எண்ணினர் போலும், புரொப்யூமா! அவளோ, ஒரு மாபெரும் அரசுக்கே புயலானள். அந்தவிபரங்களை,அடுத்த இதழில் காண்போம்.

(தொடரும்)

(5—ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டிய கட்டங்கள் விரைகின்றன.

இன்று பல இடங்களிலிருந்தும் கிடைத்திடும் வலிமையை கண்ணும் கருத்துமாக பார்த்துக்கொண்டிருக்க வேண்டும்.

அதை வெளியில் இழுத்து வீம்புக்கும்வீணராவரத்துக்கும் பயன் படுத்திக்கொள்ள, ஏனையோர் முயலக்கூடும்!! அதற்கு ஆளாகாமல், வலிமையைச் 'சூறை'க்காயாக ஆக்கிவிடாமல் இருந்திடும் மனத்திண்மை வரவர வளர வேண்டும்.

புலி வேட்டைக்குப் போவோர், வழிமாறி எலி வேட்டையைச் சதமென எண்ணுவது கூடாது என்பதுதான் பழைய உதாரணமாயிற்றே! அதையே, மீண்டும் நினைவூட்டுகிறேம் வரவிருக்கிறது, இந்தி எதிர்ப்புப் போர்! வலிமையை அதற்குப் பயன்படுத்த வழி செய்யுங்கள்!!!

வாழ்த்துகிறேம்!

பொதுக் குழு உறுப்பினரும் நமது கெழுதகை நண்பருமான திரு இராசரெத்தினம் அவர்களின் செல்வி புவனேசுவரிக்கும் தோழர் பி. எம். மணிக்கும் சென்னை, லாயிட்ஸ் ரோட்டிலுள்ள சத்தியகிரகத்தில் அறிஞர் அண்ணு தலைமையில் மிகவும் விமரிசையாகத் திருமணம் நடைபெற்றது, புது மணம் கொண்ட தம்பதிகளை வாழ்த்துகிறேம்.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இராம. அரங்கண்ணல், 9-ஏ, சர். சி.பி. ராமசாமி ரோடு, அபிராமபுரம், சென்னை-18.
அச்சிட்டோர் : எம். பி. சத்தியமூர்த்தி, முல்லை அச்சகம், 3-40, மவுண்ட்ரோடுசென்னை-6